## ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம் - 2014

ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய அதிகாரச்சட்டத்தின் (அத்தியாயம் 432) 5 மற்றும் 9 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நிறைவேற்றப்பட்ட பிரமாணங்களின் 6 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது கருத்துக்களும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

### 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆசிரிய ஓய்வூதிய சம்பள நிதியத்திற்காக செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 37,412,681 தொகையான ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் ஆண்டின் மிகை அப்பெறுமானத்தினால் கணக்குகளில் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதியத்திற்காக வடமேல், தெற்கு மற்றும் கிழக்கு போன்ற மூன்று மாகாணங்களின் பங்களிப்புப் பணம் செலவு வைக்கப்படாதிருந்ததுடன், அம்மாகாணங்களுக்குரிய முழுப் பங்களிப்புப் பணத்தையும் கணிப்பிட்டு மேலும் கிடைக்க வேண்டிய பங்களிப்புத் பணத்தை இனங்கண்டு அப்பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதியத்திற்காக காசோலை மூலம் பங்களிப்புப் பணம் அனுப்புகின்ற இரண்டு அரை தனியார் பாடசாலைகள் மீளாய்வாண்டிற்குரிய 5 மாதங்களுக்கு கிடைக்க வேண்டிய பங்களிப்பு பணத்தை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டிற்குரிய கூடுதலாக கணக்கிடப்பட்ட வரிச் செலவினம் ரூபா 3,091,571 தொகை பின்னோக்கி சீராக்கம் செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(உ) ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதி ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 253 ஆம் ஒதுக்கீட்டுத் தலைப்பிலிருந்து செலுத்தப்படுவதுடன் அச்செலவினங்களை இனங்கண்டு நிதியத்தின் செலவினமாகக் கணக்கு வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட்ட கட்டளை இலக்கம் 9(அ) பிரகாரம் ஒவ்வொரு உதவிப் பணம் செலுத்துபவர்களினதும் அவர்களின் குடும்பம் தொடர்பாக தேவைப்படக்கூடிய தகவல்களும், நிதியத்திற்காக செலுத்தப்பட்ட சகல பங்களிப்புப் பணம் தொடர்பான விபரங்களையும்

உள்ளடக்கிய பதிவேடுகள் பேணப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 120,273,433 மிகையாக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 137,046,345 ஆக இருந்ததமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகளில் ரூபா 16,772,912 ஆன குறைவொன்றைக் காண்பித்தது. பங்களிப்புப் பணத்தை மீளச் செலுத்துதல் ரூபா 887,033 ஆல் அதாவது 11 சதவீதத்தாலும், வட்டி வருமானம் ரூபா 5,049,348 ஆல் அதாவது 8 சதவீதத்தாலும் பங்களிப்பு பணப் பெறுவனவு ரூபா 15,139,795 ஆலும் அதாவது 16 சதவீதத்தாலும் குறைவடைந்தமை இவ்வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பங்களிப்புப் பணம் அனுப்ப வேண்டிய பிரிவெனாக்கள் மற்றும் அரை தனியார் பாடசலைகளின் தகவல்கள் மற்றும் கிடைத்த மாதாந்த பணத்தின் சரியான தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக நிதியத்திடம் போதியளவான வேலைத்திட்டம் காணப்படவில்லை.

(ஆ) நிதியத்தின் அங்கத்தவர் எண்ணிக்கை, மீளாய்வாண்டின் போது புதிய அங்கத்துவத்தைப் பெற்றவர்களின் எண்ணிக்கை மற்றும் நிதியத்தின் அங்கத்துவத்திலிருந்து விலகிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) மாதாந்த அங்கத்தவர் பங்களிப்பு பணப் பெறுவனவு ரூபா 5 மில்லியன் முதல் ரூபா 10.8 மில்லியனுக்கு இடையிலான வீச்சில் நிலவுவதுடன் ஒவ்வொரு மாத பங்களிப்பு பணம் பெறுவனவுகளில் தளம்பல்கள் அவதானிக்கப்பட்டன. மாதாந்தம் பெறப்பட வேண்டிய பங்களிப்பு பணம் எவ்வளவு என்பதனை கணிப்பிடும் முறைமையொன்று நிதியத்திடம் காணப்படவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது ரூபா 51.9 மில்லியன் வட்டி வருமானம் நிதியத்திற்குக் கிடைத்திருந்த போதிலும் அப்பணத்திலிருந்து நிதியத்தின் ஓய்வூதியங்களைச் செலுத்துவதற்காக எவ்வித பணமும் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் நிதியத்தின் விவாகமாகாதவர்களின் பங்களிப்புப் பணத்தை மீளச்செலுத்துவதற்காக ரூபா 8.6 மில்லியன் செலவு செய்யப்பட்டு எஞ்சிய ரூபா 43.3 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

### 4.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய பங்களிப்பு பணத்தின் மூலம் நிதியமொன்றை ஏற்படுத்தி ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டிய போதிலும், 253 ஆவது செலவின தலைப்பின் கீழ் பாதீட்டு ஏற்பாட்டின் மூலம் மேற்படி செலவினத்தை மேற்கொண்டதன் காரணமாக இந்நிதியம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் அடையப்படவில்லை. அதனால் இந்த நிதியத்தை பேணிவருவது பயனற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) ஓய்வூதிய முறைமை முகாமைத்துவம்
(இ) முதலீடு